


**18.10. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. **மனித** உரிமைகளை பாதுகாக்கும் அரணாக அரசியல் சாசனம் திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

2. **பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும்** மேம்பாட்டின் அவசியத்தை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. **குழந்தை திருமணங்களை தடுப்பதற்கான** சட்டங்களை உறுதியுடன் நடைமுறைப்படுத்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4. **சேலம் மாவட்டத்தில் ஜவுளி பூங்கா அமைக்கப்படும்** என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

5. **டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர்** ஒற்றையர் காலிறுதியில் பி.வி.சிந்து - இந்தோனேஷியாவின் **க்ரகோரியாவை** இன்று எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**ஜக்தீப் தன்கர்**

**மனித உரிமைகள் நம்நாட்டின்** கோட்பாடாக என்றென்றும் திகழ்வதாக குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லில் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் நிறுவன நாள் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், அனைத்து மக்களுக்குமான நீதி, சுதந்திரம், சமத்துவம் போன்றவை அரசியல் சாசனத்தின் சாரம்சமாக திகழ்கிறது என்றார்.

நம்நாட்டின் அரசியல் சாசனம் மனித உரிமைகளுக்கு வழிகாட்டும் பாதையாக திகழ்கிறது என்றார்.

பொதுமக்களின் பங்களிப்புடன் மனித உரிமைகள் ஆக்கப்பூர்வமாக முன்னெடுத்து செல்லப் படுவதாக குறிப்பிட்டார்.

மனித உரிமை மீறல்களின் போது அதற்கு எதிராக மக்கள் உறுதியுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

பிறரின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பது குடிமக்களின் தலையாய கடமை என்றும் திரு. ஜக்தீப் தன்கர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசிய கற்றல் வாரமான கர்மயோகி சப்தா நிகழ்வை நாளை புதுதில்லியில் துவக்கி வைக்கிறார்.

குடிமைப்பணியாளர்கள் பல்வேறு அமைப்புகள் மற்றும் தனி நபர்களின் திறன் மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நாளைமுதல் வரும் 25-ம் தேதிவரை கற்றல் வாரம் கடைபிடிக்கப் படுகிறது.

2020-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கர்மயோகி இயக்கத்தின் கீழ் உலகளவில் இந்தியாவை வளர்ந்த நாடாக நிலைநிறுத்தும் வகையில், எதிர்கால குடிமைப்பணி சேவைகள் தொடர்பான கற்றல் நிகழ்வுகள் இதில் இடம்பெறுகின்றன

தினசரி 4 மணிநேரம் திறன் மேம்பாட்டுடன் கூடிய பயிற்சி இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது.

I-Got Module வலைதளம் உள்ளிட்டவற்றின் மூலம் நிபுணர்கள் திறன் மேம்பாட்டு நிலைப்பாடுகள் குறித்து இதில் பயிற்றுவிக்கின்றனர்.

இதன் கீழ் பல்வேறு அமைச்சகங்கள் துறைகள், தன்னார்வ அமைப்புகள் மூலம் கருத்தரங்குகளும் பனிப்பட்டறைகளும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர் பயணம்**

பிரதமர் திரு. நரேந்திரமோடி பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக வரும் 22-ம் தேதி 2 நாள் பயணமாக ரஷ்யா புறப்படுகிறார்

உலகளாவிய வளர்ச்சிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் பன்முகத் தன்மையை வலுப்படுத்துவது என்ற கருப்பொருளுடன் இந்த உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக பிரிக்ஸ் நாட்டு தலைவர்களுடன் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**மன் கி பாத்**

**அகில இந்திய** வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 115-வது முறையாக வரும் 27-ம் தேதி பிரதமர் உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் தாம் உரையாற்ற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

mygov.in, நமோ செயலி 18 00 11 78 00 என்ற தொலைபேசி எண்ணில் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை வரும் 25-ம் தேதிக்குள் தெரிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖

**ராஜ்நாத் சிங்**

பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் அவசியத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் Dare to Dream படைப்பாற்றல், திறன் போட்டிகளை இன்று துவக்கிவைத்து உரையாற்றிய அவர், புதுமையான திறன் மேம்பாட்டிற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

தொழில் நுட்பமும், வளர்ச்சியும் துரிதமாகி வரும் இத்தருணத்தில் பாதுகாப்புத் துறையில் வழக்கத்திறகு மாறான போர்முறைகளால் புதிய சவால்கள் எழுந்துள்ளதாக குறிப்பிட்டார்.

சைபர் குற்றங்கள், உயிரி ஆயுதங்கள், வான் மார்க்கமான தாக்குதல்கள் போன்ற இத்தகைய சவால்களை திறம்பட முறியடிக்க நவீன தொழில் நுட்பங்கள் அவசியம் என்று எடுத்துரைத்தார்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் தனியார் துறைகளின் பங்களிப்பிற்கு அழைப்பு விடுத்த அமைச்சர் தரம் மேம்பட்ட அதேவேளையில் எதிரிகளின் தாக்குதலை தகர்த்தெறியும் தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட வேண்டும் என்றார்.

Dare to Dream நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த திரு. ராஜ்நாத் சிங் இளையோரின் தீரமிகு கனவுகளுக்கு புதிய பாதைகள் உருவாகும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

**உச்சநீதிமன்றம்**

குழந்தை திருமணங்களை தடுப்பதற்கான சட்டங்கள் உறுதியுடன் நடைமுறைப் படுத்த வேண்டுமென்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான பொதுநல வழக்கை இன்று விசாரித்த தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் தலைமையிலான அமர்வு, குழந்தை திருமணங்கள் தடுப்பு சட்டத்தில் தனிநபர் சட்டங்களை கொண்டுவரக் கூடாது என்று கூறியுள்ளது.

குழந்தை திருமணம் தொடர்பாக குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு முன்னதாக, அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அதிகாரிகள் உயர் முன்னுரிமை வழங்க நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**தேர்தல்**

**ஜார்கண்ட்டில் 43 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு** அடுத்த மாதம் 13-ம் தேதி நடைபெறும் முதற்கட்ட தேர்தலுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப் பட்டதையடுத்து வேட்புமனு தாக்கல் தொடங்கியுள்ளது

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 25-ம் தேதி கடைசிநாளாகும்.

வரும் 28-ம் தேதி அவை பரிசீலிக்கப்படுகின்றன

மனுக்களை திரும்பப்பெற வரும் 30-ம் தேதி கடைசிநாள்.

வாக்கு எண்ணிக்கை அடுத்தமாதம் 23-ம் தேதி நடைபெறுகிறது.

மஹாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலுக்கான அறிவிக்கை வரும் 22ம் தேதி வெளியிடப்படும்.

❖❖❖❖❖❖❖❖❖

**ராஜேந்திரன்**

**சேலம் மாவட்டத்தில் ஜவுளி பூங்கா அமைக்க** நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அரசின் பரிசீலனையில் இருப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**கடற்படை தினம்**

கடற்படை தினம் வரும் டிசம்பர் 4-ம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி சென்னை - கன்னியாகுமரி இடையே கார் பேரணி இன்று தொடங்கியது.

சென்னை அடையார் ஐ.என்.எஸ். கடற்படை நிலையத்திலிருந்து, தமிழ்நாடு புதுவைக்கான கடற்படை தளபதி ரியர் அட்மிரல் **ரவிக்குமார் திங்க்ரா** இதனை கொடியசைத்து தொடங்கிவைத்தார்

அடுத்த 6 நாட்களில் தமிழ்நாடு மற்றும் புதுவையில் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை கடந்து வரும் 21-ம் தேதி கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையை இப்பேரணி சென்றடைகிறது.

வழி நெடுகிலும் உள்ள கல்வி நிலையங்களில் இந்திய கடற்படை குறித்த விழிப்புணர்வை இக்குழுவினர் ஏற்படுத்த உள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**கடலூர் மாவட்டம் வடலூரில், வள்ளலார் வாழ்ந்த** இடத்தில் சர்வதேச மையம் அமைக்கப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும் என்றார்

❖❖❖❖❖❖❖❖

**எடப்பாடி பழனிச்சாமி**

**தமிழ் நாட்டில் மனித உரிமை ஆணையம்** உள்ளிட்ட தன்னாட்சி அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டுமென்றும் அஇஅதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த அமைப்புகளின் செயல்பாட்டில் தலையிடுவதை மாநில அரசு தவிர்க்க வேண்டுமென்று கோரியுள்ளார்

❖❖❖❖❖❖❖❖

**அன்புமணி ராமதாஸ்**

**தமிழ்நாட்டில் ஆவின்பால் விலையை** மறைமுகமாக உயர்த்தும் முயற்சியை அரசு கைவிட வேண்டுமென்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் திருச்சி மண்டலத்தில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பால் விநியோகத்தில் புதிதாக பச்சைஉறை பால் விலையில் மாற்றம் செய்து அதிக விலைக்கு விற்கப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**காலநிலை மாற்ற வீராங்கனைகள்**

**தமிழகத்தில் "காலநிலை மாற்ற வீராங்கனைகள்"** திட்டத்தை செயல்படுத்த 3 கோடியே 87 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக 10 லட்சம் ரூபாயும், 100 மின்சார ஆட்டோக்கள் வாங்க 3 கோடியே 77 லட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**திருச்சி வாய்ஸ்**

திருச்சி மாவட்டத்தில் தேசிய தன்னார்வ ரத்ததான தினத்தையொட்டி ரத்த தானம் வழங்கியோருக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், ரத்த தானத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖❖

**கோவில்**

**நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி** அம்பாள் திருக்கோவிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா இன்றுகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டிணம், திருவாரூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இன்று இப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

**பேட்மிண்டன்**

**டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர்** ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் பி.வி.சிந்து - இந்தோனேஷியாவின் **க்ரகோரியா மரிஸ்கா** இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

பெங்களூருவில் **நியூசிலாந்துக்கு** எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் **இந்தியா** தனது **இரண்டாவது** இன்னிங்சில் சற்றுமுன் விக்கெட் இழப்பின்றி 24 ரன் எடுத்திருந்தது.

இந்தியா தற்போது 332 ரன் பின்தங்கி உள்ளது.

3வது நாளான இன்று 3 விக்கெட் இழப்பிற்கு 180 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் களமிறங்கிய நியூசிலாந்து, தனது முதல் இன்னிங்சில் 402 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 46.

❖❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**